பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
27 07 2024 **SATURDAY** 7 15 **AM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- மத்திய பட்ஜெட், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- ஆசியான் கூட்டத்தில் பங்கேற்றுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர், தென்கொரியா, சிங்கப்பூர், இந்தேனேஷியா, மலேசியா ஆகிய நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களை சந்தித்து உரையாடினார்.
- நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்பு 670 புள்ளி எட்டு ஆறு பில்லியன் டாலர் அளவை எட்டியுள்ளதாக ரிசர்வ் வங்கி கூறியுள்ளது.
- மும்பை மற்றும் அதனை ஒட்டியுள்ள பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- ஆசிய மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி, 3 விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அணியை வென்றது..

>>>>><<<<<

மத்திய பட்ஜெட், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2024ஆம் ஆண்டு பட்ஜெட் நகலை இணையதளத்தில் வெளியிட்டுள்ள பிரதமர், வலுவான பணியாளர்களை உருவாக்கும் நோக்கில் வேலைவாய்ப்போடு இணைந்த ஊக்கத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

திறன்மிக்க பாரதத்தை உருவாக்கு விதத்தில், வீட்டிலிருந்தே திறன் மேம்பாட்டுக் கல்வியை பெறுவதற்கான திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

உள்ளார்ந்த இந்தியாவின் வளர்ச்சிக்கு வித்திடும் வகையில் நடப்பாண்டு பட்ஜெட் அமைந்துள்ளதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

>>>>><<<<<

நித்தி ஆயோக்கின் 9வது ஆட்சிமன்ற குழுக் கூட்டம், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

வளர்ச்சியடைந்த பாரதம் 2047 என்ற கருப்பொருளில் இந்த ஆண்டுக்கான கூட்டம் நடைபெறுகிறது.

இந்தக் கூட்டத்தில் வளர்ச்சியடைந்த பாரதத்திற்கான திட்ட அறிக்கை குறித்து விவாதிக்கப்படுகிறது.

மத்திய – மாநில அரசுகளின் பங்களிப்பு மூலம், நாட்டின் வளர்ச்சியை மேம்படுத்துவது குறித்து இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்படுகிறது.

கிராமம் மற்றும் நகர்ப்புற மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தும் விதத்திலான இலக்குகளை நிர்ணயித்து, இந்தக் கூட்டத்தில் ஆலோசிக்கப்படுகிறது.

மேலும், வளர்ச்சியடைந்த பாரதத்தை அடைவதற்கு மாநில அரசுகள் எந்தவிதத்தில் துணைபுரிய முடியும் என்றும் இதில் விவாதிக்கப்படவுள்ளது.

>>>>><<<<<

ஆசியான் கூட்டத்தில் பங்கேற்றுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர், தென்கொரியா, சிங்கப்பூர், இந்தேனேஷியா மற்றும் மலேசியா நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களை சந்தித்து உரையாடினார்.

லாவோஸ் நாட்டின் தலைநகர் **Vientiane**–ல் நடைபெற்று வரும் ஆசியான் கூட்டத்தில், தென்கொரியாவின் வெளியுறவு அமைச்சர் திரு. **Cho Tae-Yul**–ஐ சந்தித்து பேசினார்.

இந்தோ – பசிபிக் பகுதியில் எழுந்துள்ள புதிய ஒத்துழைப்புகள் குறித்து அவர் உரையாடினார்.

பின்னர், சிங்கப்பூர் வெளியுறவு அமைச்சர் திரு. விவியன் பாலகிருஷ்ணனை சந்தித்த அவர், இந்தியா – சிங்கப்பூர் இடையேயான உறவை வலுப்படுத்தும் விதத்திலான புதிய அம்சங்கள் குறித்து விவாதித்தார்.

இந்தோனேஷிய வெளியுறவு அமைச்சர் திருமதி. **Retno Marsudi** உடன், இருநாட்டு உறவுகள் குறித்து அவர் விரிவாக பேசினார்.

மலேசிய வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. **Mohammed Haji Hasan–**னுடன் பேசிய அமைச்சர், இருநாடுகளுக்கும் இடையிலான உறவை மேலும் வலுப்படுத்தும் விதத்திலான நடவடிக்கைகள் குறித்து உரையாடினார்.

**>>>>><<<<<**

தீவிரவாதத்தை ஒடுக்குவது, போதைப் பொருள் புழக்கத்தை தடுப்பது, ஆயுதக்கடத்தல், திட்டமிட்டு குற்றச்செயல்களில் ஈடுபடுவது ஆகியவை குறித்து தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு அஜித் தோவல், பிம்ஸ்டெக் நாடுகளின் பிரதிநிதிகளுடன் விவாதித்தார்.

மியான்மர் நாட்டின் **Naypyitaw**-ல் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பேசிய அவர், பிம்ஸ்டெக் நாடுகளுடனான தொடர்பு துறைமுகங்களை வலுப்படுத்தும் விதத்திலான மாநாடு, ஹிமாலய நதிகளை ஒருங்கிணைத்து பாதுகாக்கும் நடவடிக்கைகள் ஆகியவை குறித்து அவர் எடுத்துரைத்தார்.

4வது ஆண்டாக நடைபெறும் இந்தக் கூட்டத்தில் பொருளாதார ஒத்துழைப்பு, தொழில்நுட்ப வசதிகள் ஆகியவை குறித்தும் அவர் ஆலோசனை நடத்தினார்.

பின்னர், மியான்மர் நாட்டின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அட்மிரல் **Moe Aung–**ஐ சந்தித்து பேசினார்.

அந்நாட்டு பிரதமர் திரு. **Min Aung Hlaing-**ஐயும் திரு. அஜீத் தோவல் சந்தித்து உரையாடினார்.

**>>>>><<<<<**

நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்பு இதுவரை இல்லாத அளவிற்கு உயர்ந்துள்ளது.

இந்த மாதம் 3வது வாரத்தில் அந்நிய செலாவணி கையிருப்பு 670 புள்ளி எட்டு ஆறு பில்லியன் டாலர் அளவை எட்டியுள்ளது.

இதுகுறித்து ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்த வாரத்தில் மட்டும் 4 பில்லியன் டாலர் அளவுக்கு அந்நியச் செலாவணி உயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், இந்தியாவில் வெளிநாடுகளின் முதலீடுகள் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

>>>>><<<<<

இளநிலை மருத்துவப் படிப்புக்கான நீட் தேர்வில் திருத்தப்பட்ட முடிவுகள், தேசிய தேர்வு முகமையின் இணையதளத்தில் நேற்று வெளியிடப்பட்டது.

தரவரிசையில் 17 பேர் முதலிடம் பிடித்துள்ளனர்.

தேர்வு எழுதிய மாணவர்கள் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள தேர்வு முடிவுகளின் படி, திருத்தப்பட்ட தரவரிசையில் அறிந்து கொள்ளலாம் என்று தேசிய தேர்வு முகமை தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்கு கடத்திச் செல்லப்பட்ட பாரம்பரிய கலைப் பொருட்களை மீட்டு கொண்டு வருவதற்கான பாரம்பரிய சொத்துரிமை ஒப்பந்தம் இந்தியா – அமெரிக்கா இடையே கைழெுத்தாகியுள்ளது.

முறைகேடான வர்த்தகம், ஏற்றுமதி - இறக்குமதி, சட்டவிரோதமாக இடம்பெயர்தல், தொல்லியல் சிறப்புமிக்க பொருட்கள் கடத்தப்படுவதை தடுத்தல் ஆகியவற்றுக்கு இந்த ஒப்பந்தம் வகை செய்கிறது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த மத்திய கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. கஜேந்திரசிங் ஷெகவாத், வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த ஒப்பந்தம் முதல்முறையாக அமெரிக்காவுடன் கையெழுத்தாகியிருப்பது குறித்து மகிழ்ச்சி தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையேயான கலாச்சார தொடர்புகளை மேம்படுத்துவதற்கு இந்த ஒப்பந்தம் பெரிதும் உதவிடும் என்றும் திரு. ஷெகவாத் கூறினார்.

>>>>><<<<<

குமுளி பேருந்து நிலையத்துடன் கூடிய பணிமனை கட்டுமானப் பணிகள் நடைபெறுவதை தமிழக அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. பனீந்திர ரெட்டி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு மற்றும் கேரள மாநில எல்லையான குமுளி பகுதியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் பணிமனைக்கு சொந்தமான இடத்தில் ஒரு ஏக்கர் பரப்பளவில் சுமார் ஐந்தரை கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும், பணிமனையுடன் கூடிய பேருந்து நிலையம், பேருந்துகள் நிறுத்துமிடம், உணவகம், வணிக வளாகம் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டு வருவதை அவர் பார்வையிட்டார்.

அரசு விதித்துள்ள விதிமுறைகளை பின்பற்றி, கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் இதற்குத் தேவையான ஒத்துழைப்பை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் வழங்க வேண்டும் என்றும் திரு. பனீந்திர ரெட்டி கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் முத்ரா வங்கிக் கடன் திட்டத்தின் மூலம் சிறு குறு நிறுவனங்கள் அதிக அளவில் பயனடைந்துள்ளதாக பிஜேபி சட்டமன்ற உறுப்பினர் திருமதி. வானதி சீனிவாசன் கூறியுள்ளார்.

திருவண்ணாமலையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தொலைநோக்குப் பார்வையுடன் மத்திய அரசின் நிதிநிலை அறிக்கை அமைந்துள்ளதாக குறிப்பிட்டார்.

ஏழை எளிய மக்கள் நேரடியாக பயன்பெறும் வகையில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில் சொத்துவரி, மின் கட்டணம் ஆகியவை அதிகரித்துள்ளதால், மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படாத மாநிலமாக திகழ்வதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு கேள்விக் குறியாக உள்ளது என்றும் திருமதி. சீனிவாசன் குறை கூறினார்.

>>>>><<<<<

அமர்நாத் குகைக் கோயிலில் உள்ள பனிலிங்கத்தை தரிசிப்பதற்காக ஆயிரத்து 771 பேர் கொண்ட யாத்திரிகர்கள் குழு இன்று அதிகாலை ஜம்முவிலிருந்து புறப்பட்டது.

இக்குழுவினர் 63 வாகனங்களில் இரு பிரிவுகளாக பல்தாத் மற்றும் பஹல்காம் முகாம்களுக்குச் சென்று தங்களது யாத்திரையை தொடர்கின்றனர்.

>>>>><<<<<

மும்பை மற்றும் அதனை ஒட்டியுள்ள பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கடந்த சில நாட்களாக மும்பையில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது.

இந்நிலையில், இன்று கனமழைக்கு வாய்ப்பிருப்பதாகவும், பால்கர், ரெய்காட் மாவட்டங்களுக்கு மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், தானே மற்றும் ரத்னகிரி மாவட்டங்களுக்கு ஆரஞ்ச் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

ஆசிய மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி, 3 விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அணியை வென்று, இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

தம்புலாவில் நேற்று நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில், முதலில் விளையாடிய பாகிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 140 ரன் எடுத்தது.

பின்னர் விளையாடிய இலங்கை அணி, 3 விக்கெட் இழப்பிற்கு 141 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

நாளை நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில், இந்திய அணி - இலங்கையை எதிர்கொள்கிறது.

>>>>><<<<<

பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகள் வண்ணமிகு கலைநிகழ்ச்சிகளுடன் நேற்று தொடங்கியது.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் கனமழை பெய்த போதும், ஒலிம்பிக் போட்டிகளின் தொடக்க நிகழ்ச்சி, எந்தவித தடையும் இன்றி நடைபெற்றது.

ஒலிம்பிக் போட்டிகளில் மூன்று முறை ஜூடோ சாம்பியன் பதக்கம் வென்ற **Teddy Riner** ஒலிம்பிக் தீபத்தை ஏற்றிவைத்தார்.

இந்திய அணியின் பேட்மிண்டன் வீராங்கனை பி.வி. சிந்து, டேபிள் டென்னிஸ் வீரர் சரத் கமல் ஆகியோர் தலைமையில் 80 பேர் கொண்ட இந்திய அணியினர் ஒலிம்பிக் அணிவகுப்பில் பங்கேற்றனர்.

ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறும் மைதானத்தை தவிர்த்து, முதல்முறையாக, **Seine** நதிக்கரையில் வண்ணமிகு தொடக்க நிகழ்ச்சிகள் 4 மணிநேரம் நடைபெற்றன.

ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொண்டுள்ள இந்திய வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு பிரதமர் திரு. நரேந்திரமோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்திய வீரர் வீராங்கனைகள், நாட்டு மக்களை பெருமைப்படுத்தும் விதத்தில் தங்களது திறமைகளை வெளிப்படுத்தி, வெற்றி வாகை சூட வாழ்த்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<